உ
சிவமயம்



மயிலிட்டி தெற்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும்,
யாமாச்சந்தி, உடுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் தம்பியப்பா தர்மலிங்கம்

அவர்களின்

சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

03.03.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





எம்மையெல்லாம் பேணிப்
பாதுகாத்து உயிர்வாழ்வு அளித்த
எங்கள் தெய்வத்தின் திருவடியில்
இம் மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மயிலிட்டி தெற்கு தெல்லிப்பழையைப்
பிறப்பிடமாகவும்,
யாமாச்சந்தி, உடுவில் தெற்கை
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் தம்பியப்பா தர்மலிங்கம்

அவர்களின்
சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

03.03.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# தம்பியப்பா தர்மலிங்கம்

அவனியில்
16.08.1951

அவனிடம்
19.01.2004

## திதி நிர்ணயப்பா

சீர்மிகு சுபானுவிதன் சிறப்புறு தைமகளின்
பேர்மிகு அபரபக்க திரயோதசியில் – பார்புகழ்
தம்பியப்பா தர்மலிங்கம் தன்னுடலை நீத்து
நம்பிரானை நாடினனே நயந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனியில் அமரர் தர்மலிங்கம்

அன்றிலிருந்து இன்றுவரை தமக்கென ஓர் தனிக் கலா சாரத்தையும், தனித்துவத்தையும் பேணி வாழ்ந்து வரும் தங்கத் தமிழினம் பொங்கி மிளிரும் யாழ் மண்ணிற்கும் பெருமை சேர்க்கும் திருவூர்களில் வலிகாமப் பிரிவில் மயிலிட்டி தெற்கு தெல்லிப்பழை (கட்டுவன்) எனும் கிராமும் ஒன்று. இக் கட்டுவன் தன்னக்கேயுரிய செம்மண்ணும், நன்னீரும் கொண்டு வளங்கொழிக்கும் விவசாயப் பூமியாகத் திகழ்ந்ததை யாரும் மறக்க முடியாது.

இத்தகு சிறப்பு வாய்ந்த கட்டுவனில் ஆறுமுகம் தம்பியப்பா தாமர் நாகம்மாவை துணைவியாக ஏற்று இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வரும் நாளில் நாகலட்சுமி (பிரான்ஸ்), தவராசா (ஆசிரியர்), தருமலிங்கம், ஜெயலட்சுமி (பிரான்ஸ்), இராஜ லட்சுமி (பிரான்ஸ்), சாந்தலிங்கம், சாந்தசொருபன் (பிரான்ஸ்) என்னும் எழுவரை இப்புவிக்கு ஈய்ந்தனர். இவ்வெழுவரில் மூன்றாமவர் தருமலிங்கம் எனும் அதிபர் ஆவார்.

இவர் தன் ஆரம்பக்கல்வியை மயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாசாலையிலும், மேற்படிப்பை யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் மேற்கொண்டதன் பயனாக ஓர் ஆசிரியராக தம்மை இம்மக்களுக்கு சேவையாற்றும் பொருட்டு ஆக்கிக் கொண்டார். இவர் தனது முதல் நியமனத்தை கிளி/கரியாலை நாகபடுவான் தமிழ் வித்தியாலயத்தில் ஏற்றார். தொடர்ந்து கிளி/பல்லவராயன்கட்டு தமிழ் மகா வித்தியாலயத்திலும் பணியாற்றி, தன் சொந்த மாவட்டமான யாழ் மாவட்டத்தில் நாகர் கோயில் மகா வித்தியாலயத்தில் பதவியுயர்வு பெற்று அதிபராக அமர்ந்து தனது முதல் அதிபர் பதவியை ஏற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காலப் பகுதியில் உடுவில் தெற்கு யாமாச்சந்தியைச் சேர்ந்த திரு.திருமதி இராசலிங்கம் இராசலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி சறோஜாதேவியை பெரியோர்களின் ஆசியுடன் திருமணம் செய்தமையால், இவருக்கு இரகுநாதன் (ஜேர்மனி), குகநாதன் (நோர்வே) ஆகிய இரு மைத்துனர்களும், சத்தியதேவி (லண்டன்) சகிலாதேவி (ஆசிரியர்) ஆகியோர் மச்சாள்மார்களு மாக உறவு முறைக்குள்ளாகினர்.

பின்னர் இவர் யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியா சாலைக்கு அதிபராக இடமாற்றம் பெற்று, ஏறக்குறைய பதினொரு வருடங்களாக இங்கு சேவையாற்றினார். இவரது சேவைக் காலத்தில் இவர் தனது பள்ளியை மிகவும் நேசித்து பணியாற்றிய மையை பல மேலதிகாரிகள் புகழ்ந்து போற்றியுள்ளனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

விதி வசத்தால் நோயின் பிடியிற் சிக்கியமையால் தமது இறுதி நாட்களில் தமது அயற் பாடசாலைகளுக்கு சேவை செய்யும் பொருட்டு இடமாற்றம் பெற்றார்.

இதன் நிமித்தம் யா/ஆனைக்கோட்டை றோமன் கத்தோ லிக்க வித்தியாசாலையிலும், யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிர மணிய வித்தியாலயத்திலும் பின்னர், யா/மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் பணியாற்ற வாய்ப்புக்கிட்டியது.

நாட்டின் சூழ்நிலையும் இடம்பெயர்வுகளின் தாக்கமும் இவரை ஓர் நிரந்தர நோயாளியாக்கிவிட்டது. எது எப்படியிருப் பினும் தமக்குப் பின் வாரிசாக தமது பெறாமகளாக தனுசியாவை ஏற்று வளர்த்து எவ்வித குறைவுமின்றி வாழ்நாளையோட்டி வாழ்ந்தார். இவர் பொது நோக்குடன் தாம் எடுத்த பணியைச் சிறப்பாக நடாத்த வித்திட்டவை இவரது ஆரம்பகால களப் பயிற்சிகள் ஆகும். அக்காலத்திலேயே இவர் மயிலிட்டி தெற்கு ஞானோதய இளைஞர் மன்றத்தின் பொருளாளர் பதவியை மிகத் திறம்பட வகித்து பாராட்டுப் பெற்றவர். இவர் தம் குலதெய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான ஆனந்த வைரவப் பெருமான் மீதும், மயிலிட்டி தெற்கு அல்வத்தை வீரபத்திரப்பெருமான் மீதும், அருள்மிகு தெல்லிநகர் துர்க்கை மீதும், மானிப்பாய் மருதடியானையும் ஆறாத பக்தி கொண்டு அர்ச்சித்து வந்தவர்.

தனஞ்சயன், யாழினி, சோபினி, ஜனகன், மிதுனன் ஆகியோருக்கு அன்பு மாமாவாகவும், சுமங்கலி, கௌசிகா, அபிராமி ஆகியோரின் ஆசை சிறிய தந்தையாகவும், சாயினி, சர்வினி, ஆதிபன், ஆருசனின் அன்புப் பெரியப்பாவாகவும், இறுதிக் காலங்களில் அளவளாவியிருந்தார். "எப்பவோ முடிந்த காரியம்" என்ற அருள் வாக்குக்கு இணங்க 19.01.2004 திங்கட்கிழமை தன்குலத் தெய்வமாம் வைரவப் பெருமானுக்கு தன்னை அர்ப்பணமாக்கி தனது அவனி வாழ்வை நிறைவு செய்தார். அந்நாளில் ஆத்மா சாந்தியுறுவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

## உலகப் பெருந் தவறுகள்

1) உழைக்காமல் ஈட்டிய செல்வம்
2) மனச்சாட்சி இல்லாத இன்பம்
3) பண்பு இல்லாத அறிவு
4) நல்லொழுக்கம் இல்லாத வணிகம்
5) மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
6) தியாகம் இல்லாத வணக்கம்
7) அடிப்படைக் கொள்கை இல்லாத அரசியல்

மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலயத்தின் மதிப்பார்ந்த தர்மலிங்கம் பற்றி.........

அமரர் தம்பியப்பா தர்மலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை மயிலிட்டியில் ஆரம்பித்து அதிபராக இறுதிச் சேவையை மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆற்றியமை அமரர் அவர்களுக்கு ஆத்ம திருப்தியை அளித்தது என்பதை நான் உணர்ந்துள்ளேன். நிர்வாகத்தில் கடுமையான போக்கைக் கடைப்பிடித்தாலும் கூட நேரம் தவறாமை, ஒழுங்கு கட்டுப்பாடு, ஏழைகளுக்கு உதவுதல் என்ற வகையாக உயர்ந்து நிற்பவர் தர்மலிங்கம் அவர்கள். உடல் இயலாத நிலையிலும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பாடசாலைகளைக் கண்டிப்புடன் வழி நடத்தியவர். சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய வேளையிலும், திடமாக நாட்டுப் பற்றுடன் வாழந்தவர். கடினமான சொற்களை அவர் உதடுகள் உரைத்தபோதும், உள்ளம் ஈரமாக இருந்ததை என்னால் உணரமுடிந்தது. நாட்டையும், வீட்டையும் விட்டுச் செல்வது துரோகம் என்றெண்ணி எமக்குத் துயரம்தரும் முடிவை அவர் எடுத்தபோதிலும் இறைவன் அவரது உயர்ந்த குணங்களுக்காக அவரது ஆன்மாவுக்கு சாந்தியைத் தரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

திருமதி. ஜெ. இருதயநாதன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி உலகில் நேர்மையோடு செயற்பட்ட அதிபர்

மண்ணில் தோன்றிய மனிதன் எப்போது இப்பூவுலகை விட்டுச் செல்வான் என்பது இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு விடயம் என்பதை நன்குணர்ந்தவரும், மரணத்தையிட்டுக் கவலை யடைய மாட்டார்கள் என்பது ஆன்றோர் வாக்கு. எது எப்படி யிருப்பினும் நீண்டகாலம் எம்மோடு பழகிய ஒரு கல்விமான் இளம் வயதிலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார் என்பதைக் கேள்வியுற்ற போது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. 1991, 1992, 1993ம் ஆண்டுகளில் நாம் இருவரும் அதிபராக பாடசாலைக்கு சைக் கிளில் செல்லும் போதும், வரும்போதும் பல்வேறு கருத்துக்களை பரிமாறிக் கொண்டதை நினைத்துப் பார்க்கின்றேன். தனது பாட சாலைகளில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என அடிக்கடி வினா எழுப்பிக் கொண்டே வருவார்.

சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்டத்தில் ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலையில் அதிபராக வந்தபோது சொல்லிலே, செயலிலே, நிதியிலே, நேர்மைமிக்க ஒரு அதிபரைச் சந்தித்தேன். தீவிர நோயாளியாக இருந்தபோதும் பாடசாலைக் கடமைகளில் நேரம் தவறாத அதிபராக, சிறந்த நிர்வாகத்திறன் கொண்ட அதிபராகத் திகழ்ந்துள்ளார். நிர்வாகத்தில் கடும்போக்கைக் கடைப்பிடிப்பது இவரிடமிருந்து மாற்றமுடியாத ஓர் அம்சம். சில வேளைகளில் தன்னை மறந்த நிலையில் கடும்போக்காளராக மாறிய சந்தர்ப்பங்களில் இவருக்கு எதிர்ப்புக்கள் ஏற்பட்டதை கல்வி உலகு நன்கறியும். தான் சரியென்று கருதும் விடயங்களை யாருக்கும் மிகவும் துணிச்சலோடு எடுத்தியம்பும் வல்லமை பெற்றவர். பலம் , பலவீனம் இரண்டையும் தன்னகத்தே கொண்ட புதுமையான மனிதனாக இருந்தமையால் தன்னைச் சூழ உள்ளவர்களின் துன்பங்களையும் எதிர்நோக்க வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார். அமரர் தம்பியப்பா தர்மலிங்கம் அவர்களின் ஆன்மா சாந்தி சமாதானத்துடன் மேலுலகத்தில் நிலைபெற இறைவன் அருளுற வேண்டி நிற்கின்றேன்.

க. தனபாலசிங்கம்.
கோட்டக் கல்விப் பணிப்பாளர்.
சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையே கண்ணாயினார்

அமரர் தர்மலிங்கம் எமது பள்ளியில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக அதிபராகப் பணியாற்றியுள்ளார். இக் காலங்களில் இவரது பணியின் பாங்கை இங்குள்ளவர் மூலமாகவும், எம்மிட முள்ள ஆவணங்கள் மூலமாகவும் அறிய முடிகிறது. இவற்றி லிருந்து ஓர் உண்மையை உணரலாம். இவர் கடமையே கண் ணாயினர் என்று. ஆம் இவரது இக் குணத்தினாலே பல சவால் களையும் எதிர்நோக்கி பாடசாலையைத் திறம்பட நடாத்தி யுள்ளார். இவரோடு சிலநாட்கள் பணியாற்றவும் எமக்கு வாய்ப் பேற்பட்டது. எடுத்த பணியைத் திறம்பட செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். பின்னாளில் இவரது உடல்நிலை பாதிப் புற்று தமது அயற் பாடசாலைகளிற் பணியாற்றும் வேளையிலும் சற்றும் தன் மனதைத் தளரவிடாது பணியாற்றி வந்தார். அயராது உழைத்த அவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், கவிமணி க. ஆனந்தராசா

யா/உரும்பிராய் சந்திரோதய
வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணங்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்லவண் ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக் கியாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

அங்கமும் வேதமு மோதுநாவ
ரந்தணர் நாளு மடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி
மருக லிலாவிய மைந்த சொல்லாய்
செய்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உம்மைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரும் உலகுங் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்றநிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்து ம் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் கா ட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச்சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயாஅரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்கள்

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதங் கச்சி ஏகம்பனே.

முடிசார்ந்த மன்னருமற்று முள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்துமண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வைநினைப்பதல்லாற் பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுய்யவேண்டுமென்றே யறிவாரில்லையே.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாயப் படுமுன்னே மேல் விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றலாத் தானையே கூறு.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டுவிட னேயுடலைச்
சுட்டுவிடப் போகிறார் சுற்றத்தார் – பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னே னிதுவே சுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அருள்மொழி மணிகள்

1. Duty without love - Deplorable
அன்பில்லாக் கடமை - இழிவானது.
Duty with love - Appreciable
அன்புடன் கடமை - விரும்பத்தக்கது.
Love without Duty - Divine
கடமையில்லா அன்பு - தெய்வீகமானது.

2. If you take one step towards me, I will take one hundred steps towards you.
என்னை நோக்கி ஒரு அடி வை. நான் உன்னை நோக்கி நூறு அடி வருவேன்.

3. End of knowledge is love
அறிவின் அந்தம் - அன்பு
End of Culture is perfection
கலாசாரத்தின் அந்தம் - நிறைவு
End of wisdom is liberation
ஞானத்தின் அந்தம் - விடுதலை
End of Education is Character
கல்வியின் அந்தம் - ஒழுக்கம்

4. Waste of time is waste of life
காலத்தின் விரயம் வாழ்வின் நாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. Pleasure is an interval between two pains
இன்பம் என்பது இரு துன்பத்தின் இடைவெளியே.

6. You can make a stone as God. But do not make God as stone.
கல்லைக் கடவுளாக்கு. கடவுளைக் கல்லாக்காதே.

7. Past cannot be recalled. Future is not certain. Therefore engage in holistic thought word and deed in the present.
சென்றது ஒருபோதும் வராது. வருங்காலம் நிச்சய மில்லை. ஆதலால், இன்றே, பவித்திரமான எண்ணம், சொல், செயல்களில் ஈடுபடு.

8. You are not one but three
First - what you think about your self.
Second - what the others thinks about you
Third - what you really are.
நீ ஒருவனல்ல. மூவராயிருக்கிறாய்.
ஒன்று - பிறர் உன்னைப்பற்றி நினைப்பது.
மற்றது - நீ உன்னைப்பற்றி எண்ணியிருப்பது.
மூன்றாவது - நீ உண்மையில் யாரென்பது.

9. Love is my form.
Truth is my Breath
Bliss is my food.
My life is my message
அன்பு - என் உருவம்
சத்தியம் - என் மூச்சு
ஆனந்தம் - என் உணவு
என் வாழ்க்கை - நான் உங்களுக்குத் தரும் செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. Start the day with love.

Spend the day with love.
Fill the day with love.
End the day with love.

| | |
|---|---|
| ஒவ்வொரு நாளையும் | அன்புடன் தொடங்கு<br>அன்பில் செலவிடு<br>அன்பால் நிரப்பு<br>அன்பில் பூர்த்தி செய். |

11. Love is giving and forgiving. Self is getting and forgetting.

அன்பு வளர்வது - கொடுப்பதிலும், மன்னிப்பதிலும்.
தன்னலம் வளர்வது - பெறுவதிலும், அதை மறப்பதிலும்.

12. Believe, there is nothing higher sweeter changeless than the truth.

நம்புங்கள் - சத்தியத்தைவிட மேலானது, உயர்ந்தது, இனிமையானது, மாறாதது எதுவும் கிடையாது.

13. Patience confers necessary strength to man

பொறுமையே மனிதனுக்கு வேண்டிய பலத்தைத் தருகிறது.

14. What you do not like others to do to you do not your self do that to others.

எதை உனக்கு மற்றவர்கள் செய்யக்கூடாது என்று எண்ணு கிறாயோ அதைப் பிறருக்குச் செய்வதைத் தவிர்.

15. Loving the distant God has no meaning that love is just mere thought and word.

தூரத்தில் உள்ள கடவுளிடத்து அன்பு செய்வது என்பது அர்த்த மற்றது. அந்த அன்பு வெறும் எண்ணங்களும், சொற்களுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவே மருந்து

- சுக்கும் கருப்பட்டியும் சேர்த்துக் குடிநீராக்கிக் குடித்து வர உடல் தளர்ச்சி நீங்கும். நன்கு பசி எடுக்கும்.

- சுக்கைச்சுட்டு பனங்கட்டி நாலில் ஒரு பங்கு சேர்த்து அரைத்து குளம்புப் பதமாக எடுத்து காலை, மாலை கொட்டைப்பாக்களவு சாப்பிட்டு வர வயிற்றுப் பொருமல், ஏப்பம் தீரும்.

- செவ்வாழைப்பழம் இரவு உணவுக்குப் பிறகு சாப்பிட்டு வர பல் தொடர்பான பாதிப்புக்கள் சரியாகும். தினமும் ஒரு செவ் வாழைப்பழம் சாப்பிட்டுவர தள்ளாத வயதிலும் பற்கள் எந்தத் தொந்தரவும் செய்யாது.

- நொச்சி இலையைக் காயவைத்து இடித்துத் தூள் செய்து நீருடன் கலந்து குடிநீராகக் குடிக்க இருமல், காசம் நீங்கும். இதனைத் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து ஆவிபிடிக்க உடல் வலி, தலைவலி நீங்கும்.

- மண் சட்டியில் வேப்பிலைகளைப் போட்டு வாயை மூடி நன்கு சாம்பலாகும் வரை அடுப்பில் வைத்துவிடவும். சாம்பல் ஆனதும் பொடி செய்து மூன்று கிராம் எடுத்து ஐந்து கிராம் தேனில் குழைத்துச் சாப்பிட வயிற்றுப் புண் நீங்கும்.

- அகத்திக் கீரையை சமைத்துச் சாப்பிட்டால் உடலுக்கு மிக நல்லது. புகையிலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நெஞ்சுக் கூட்டின் நஞ்சு அகலும். வயற்றுச் சூடு. வயிற்றுப் புண் வாய்ப் புண் குணமாகும். பார்வை தெளிவு பெறும். மலம் இளகும். நீரடைப்பு அகலும். இந்தக் கீரை பத்தியம் இருப்பவர்களுக்கு ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ருசியும் மணமும் உள்ள கொத்தமல்லிக் கீரையை கருவேப்பிலை, மிளகு, புளி, உப்பு, வெங்காயம், உள்ளி என்பவற்றுடன் அரைத்து நல்லெண்ணெயில் தாளித்து உணவுடன் சாப்பிட பித்தநோய், வாந்தி, குமட்டல் என்பன நீங்கும்.

❖ அம்மை, வைசூரி வீட்டில் யாருக்கும் வந்தால் இந்தநோய் மற்றவர்களுக்குப் பரவாமல் இருக்க தாழை விழுதை தட்டிச் சாறு எடுத்து நான்கு மடங்கு சக்கரையுடன் கலந்து காய்ச்சி மூன்றுவேளை சாப்பிட தொற்றுநோய் அணுகாது.

❖ அறுகம்புல்லை, தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தொழுநோயுள்ளவர்கள் பூசிவர தோல்க்காயம் குணமாகும்.

❖ பேதி தொடர்ந்து வந்தபோதும், மலச்சிக்கல் ஏற்பட்ட போதும் வாய்நாற்றம் உண்டானபோதும் பசி ஏற்படாமல் இருக்கும் போதும் மட்டுமே மாங்காய் தின்னலாம்.

❖ இருதய நோய் உள்ளவர்கள் மாதுளம்பழத்துடன் தேன் கலந்து சாப்பிட விரைவில் குணமடைவர்.

❖ சித்த மருந்துகள் பலனளிக்காமல் போவதற்கான காரணம் தெரிந்தோ, தெரியாமலோ மருந்துண்ணும்போது பத்தியத்தை முறிக்கும் உணவுவகைகளைச் சாப்பிடுவது தான். மருந்துண்ணும்போது அகத்திக்கீரை, பாவற்காய், சுரைக்காய், பூசனிக்காய், பரங்கிக்காய், கடுகு, நல்லெண்ணெய், மாங்காய், புளி, எலுமிச்சை, கிழங்குகள் பத்தியத்தை முறிக்கும். கர்ப்பிணிகளுக்கு, கடுகு உப்பு, புளி, காரம் உடலுக்கு ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இரப்பையில் அதிகமாக அமில நீர் தேங்கி நெஞ்சு எரிவு, வயிற்றில் காந்தல், கோளாறுகள் உண்டானால் உணவு உட்கொள்வதற்கு முன் இரண்டு கரண்டி தேன் உட்கொள்ள வேண்டும்.

❖ சிறு குழந்தைகளுக்கு பாலில் சீனியைக் கலந்து கொடுப்பதைத் தவிர்த்து தேன் கலந்து கொடுத்தால் நல்ல பலனைப் பெறுவார்கள்.

❖ பிரசவ வேதனை ஏற்படு முன்னர் இரண்டு அவுன்ஸ் தேன் குடித்தால் சுகமான பிரசவம் ஆகும்.

❖ கருந்துளசி இலையை வெறும் வயிற்றில் காலையில் தினமும் சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும். மூளை விருத்தி யடையும்.

❖ உப்பை அதிகமாக உணவில் சேர்த்தால் மூளைபாதிப்படையும்.

❖ வல்லாரைக்கீரையை அதிகமாகக் சாப்பிட்டு வந்தால் ஞாபகசக்தி அதிகமாகும்.

❖ தலையில் சொடுகு ஏற்பட்டு மயிர் உதிர்ந்தால் புற்றுமண்ணை எடுத்து தலையில் நன்றாகப் பூசி குளித்தால் மயிர் கொட்டுவது நின்றுவிடும்.

❖ எந்த ஊறுகாயும் அளவுடன் தான் சாப்பிட வேண்டும். அடிக்கடி ஊறுகாய்களைத் தொட்டுக்கொண்டு சாப்பிடுபவர்களுக்கு அல்சர் வரும். அதனையும் கவனியாமல் சாப்பிடுபவர்களுக்கு வயிற்றில் புற்றுநோய் வரும். உப்பு உயிரைக் கொல்லும். உப்பில் ஊறிய காய் தானே ஊறுகாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடம்பில் வலியிருப்பவர்கள் புளியம் இலையை அவித்து அந்நீரில் குளித்து வந்தால் உடல் வலி நீங்கும்.

- உடம்பு முழுவதும் அரித்தால், உப்பை அரைத்து உடல் முழுவதும் பூசிய பின் நன்றாகக் குளியுங்கள். உடல் அரிப்பு நீங்கும்.

- மோர் சாப்பிடுவதால் உடலில் கொழுப்புச் சத்து கரைந்துவிடுகின்றது. மோர் சாப்பிடுவதால் ஜீரணசக்தி ஏற்படுகின்றது. ஆயுள் அதிகமாகின்றது.

- களைப்பாக இருக்கும்போது சாப்பிடக் கூடாது. அஜீரணத்தை ஏற்படுத்தும் களைப்புக்கு உணவு மருந்தல்ல. ஓய்வு தான் அவசியம்.

- தினமும் ஐந்தாறு உள்ளிப்பூண்டை எடுத்து தோலுரித்து பாலில் போட்டுக் காய்ச்சி இரவில் இருபத்தொரு நாட்கள் குடித்துவர இரத்தக் கொதிப்பு குணமாகும்.

- வெள்ளைப் பூண்டை தட்டிச்சாறு எடுத்து இதேயளவு இஞ்சிச் சாறையும் கலந்து காலையில் மூன்று நாள் சாப்பிட்டு வர நெஞ்சு வலி குணமாகும்.

- சிலருக்கு அடிக்கடி உடல் வலி ஏற்படும். அடித்துப் போட்டது போல் இருக்கும். சுரைக்கீரை வாங்கி சுத்தப்படுத்தி பூண்டு, சிறிது மிளகு சேர்த்து கடைந்து சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிட உடல் வலி குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலும் நன்றிகள்



எமது குடும்பத் தலைவரின்

**அமரர் தம்பியப்பா தர்மலிங்கம்**

அவர்களின்

பிரிவு குறித்த செய்தி கேட்டு ஓடோடி வந்து
உதவிய உற்றார், உறவினர்,
நண்பர்களுக்கும், மலர் வளையங்கள், மாலைகள்
சாத்தி அஞ்சலி உரைகள் நல்கிய கோட்டக்கல்வி
உதவிக் கல்விப்பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள் அனைவருக்கும், இன்று இவ் ஆத்மசாந்திப்
பிரார்த்தனைகளில் பங்குபற்றிய அனைவருக்கும்,
இம் மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த பாரதி
பதிப்பகத்தாருக்கும், தொலைபேசி மூலமும், தந்தி
மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும்,
மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும்
எமது இதயத்து நன்றிகள்.

இப்படிக்கு
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ

தம்பியப்பா + நாகம்மா
(அமரர்)

- நாகலட்சுமி + கிருஷ்ணநாதன்
  - தனஞ்சயன் (பிரான்ஸ்)
- தவராசா + நாகரட்ணம்
  - சுமங்கலி
  - கௌசிகா
  - அபிராமி
  - (கொழும்பு)
- தர்மலிங்கம்
- ஜெயலட்சுமி + சற்குணராஜா (பிரான்ஸ்)
- இராஜலட்சுமி + லோகேஸ்வரன்
  - யாழினி
  - சோபினி
  - ஜனகன்
  - (பிரான்ஸ்)
- சாந்தலி
  (அமர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

இராசலிங்கம் + இராசலட்சுமி

ந்தலிங்கம் (அமரர்)

சாந்தசொரூபன் + பிறேமகுமாரி (பிரான்ஸ்)

சறோஜாதேவி

இரகுநாதன் + ரமணி
மிதுனன்

சத்தியதேவி + பாஸ்கரன்
சாயினி
சர்வினி

குகநாதன் + கவிதா

சசிலாதேவி + முருகவேள்
ஆதிபன்
ஆருசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

JOTHI 2925

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம், ௪௨௦, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.